Registered as a News Paper    பக்கங்கள் 4    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆடி 17    01 - 08 - 1992    சனிக்கிழமை    ஓசை 165

## க. பொ. த. (உ/த) பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

கடந்த இரண்டு வருடங்களின்பின் இன்று இலங்கை முழுவதும் ஒரே நேரத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது. வடக்குக் கிழக்கைச் சேர்ந்த இருபதாயிரம் பரீட்சார்த்திகள் உட்பட ஒரு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் மாணவர்கள் இம்முறை இப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். யாழ். மாவட்டத்தில் அறுபத்தேழு பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு இப்பரீட்சைக்கு பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக எண்ணாயிரம்பேர் தோற்றவுள்ளனர். இன்று ஆரம்பமாகும் இப்பரீட்சை எதிர்வரும்இருபத்தைந்தாம்திகதியுடன்முடிவடைகிறது.

# தமிழர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான அரசின் இரட்டை அணுகுமுறை தோல்வி

## மீன்பிடிக்க வேண்டாமென முஸ்லிம்களுக்கு அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பூநொச்சிப் பகுதியில்மீன்பிடிக்கச் செல்ல வேண்டாமென முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் அமைச்சர் மன்சூர்.

மேற்படி பகுதிகளில் நிலைமை சுமுகமாக திரும்பும்வரை அப்பகுதிகளில் மீன்பிடிக்க தடையை வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் அறிவித்துள்ளதாக மட்டு அரச அதிபர் அறிவித்துள்ளார். (21)

## ஒரு மருத்துவ மாணவன் தொடர்ந்து தடுத்து வைப்பு

(கொழும்பு)

றாகமை மருத்துவக் கல்லூரிக்குப் பரீட்சை எழுத வந்த வேளையில் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான திருக்குமரன் தொடர்ந்தும் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 23 ஆம் திகதி சிறி மாணிக்கவாசகம், திருக்குமரன்என்ற மூன்று மாணவர்களும், வனஜா கந்தையா என்ற மாணவியும் கைதுசெய்யப்பட்டார்கள்.

பின்னர் இவர்களில் திருக்குமரன் தவிர்ந்த ஏனைய மூவரும் விசாரணையின் பின்னர் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ மாணவர் கைது ஆட்சேபம்தெரிவித்துகடிதம்

(யாழ்ப்பாணம்)

விரோத மனப்பான்மை கொண்ட சிலரின் தவறான தகவல் காரணமாக யாழ்ப்பாணம் மருத்துவக் கல்லூரி [illegible] ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த 23ஆம்திகதி றாகமை தனியார் மருத்துவ மனைக்கு பரீட்சை எழுதச் சென்ற நான்கு தமிழ் மாணவர்கள் [illegible]

## பிரேமதாசா எதிர்கொள்ளும்நெருக்கடி

(கொழும்பு)

தமிழர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கடைப் பிடித்து வந்த இரட்டை அணுகுமுறை தோல்வியடைந்து விட்டதாக கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஒருபுறம் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை மறுபுறம் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வு காணும் அணுகு முறையே தற்பொழுது தோல்வி கண்டுள்ளது. இதன் காரணமாக இனப்பிரச்சினை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது அரச வட்டாரங்களில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

கடந்த வருட மத்தியில் இருந்து பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக இரட்டை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. இவ் அணுகுமுறை மூலம் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கும் அதேவேளை பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் கொண்வரவும் அரசாங்கம் முயற்சித்தது. இதற்காக பெரும் அளவில் இராணுவ தளபாடங்களையும் கொள்வனவு செய்ததோடு பெரும் தாக்குதலுக்கும் அனுமதியும் வழங்கியது. ஆனால் எதிர் பார்த்தது போன்று இராணுவம் வெற்றி பெற முடியாத நிலை ஏற்பட்டதால் அரசின் அணுகுமுறையின் ஒரு பகுதி தோல்வி கண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை, அரசியல் ரீதியாக தீர்வு காண உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தனது நோக்கத்தை எட்டவில்லை முன்னரை விட அரசியல்நெருக்கடி அதிகரித்தது. பாராளுமன்றத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு இல்லாமல் யுத்தம் வெற்றி அளிக்காது

யுத்தம் நிறுத்தப்பட வேண் [illegible]

## உற்சவ கால ஒழுங்குகளில் தமிழீழ காவல்துறை

எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகி, 29 ஆம் திகதி வரை நடைபெறும் நல்லூர்க் கந்தசாமி ஆலய உற்சவ காலங்களின்போது அடியார்களின் நலனை முன்னிட்டு தமிழீழ காவல் துறையினர் சேவையில் ஈடுபடவுள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்பு, வீதிப்போக்குவரத்து ஒழுங்கு முறைகள் என்பனவற்றைத் தமிழீழ காவல்துறையினர் பொறுப்பேற்று சேவைபுரிவர். இதற்காக நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பருத்தித்துறை வீதியில் தமிழீழ காவல்துறையின் உற்சவகாலப் பணிமனை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிமனை உற்சவகாலம் முழுவதும் இரவு பகலாக இயங்கும்.

வீதிப்போக்குவரத்து பின்வரும் முறையில் நடைமுறையில் இருக்கும்.

3 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதிவரைபருத்தித்துறை வீதி யாழ். மாநகரசபை அலுவலகம் முன்பாக இருந்து, அரசடிச் சந்திவரையும் கோயில் வீதி, சங்கிலியன் வீதிச் சந்தியிலிருந்து செட்டியொழுங்கை சந்தி வரையிலும் செட்டி வீதி செட்டியொழுங்கைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதி வரையிலும் வாகனப்போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

கல்வியங்காட்டுப்பக்கமிருந்து பருத்தித்துறை வீதி வழியாக நகரைநோக்கிச் செல்லும் வாகனங்கள், முத்திரைச் சந்தி, செம்மணி வீதி. கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி வழியாக ஆனைப்பந்திச் சந்தியைச் சென்றடைந்து, அங்கிருந்து நகருக்குச் செல்லலாம். நகரிலிருந்து கல்வியங்காட்டுப்பக்கம் செல்லும் வாகனங்களும் அதே வழியாகச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் தாமதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிலுநர்களின் நியமனத்திற்காகத்தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படுவது தாமதமடைந்துள்ளது [illegible] அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. இப்பட்டியல் அங்கிருந்து கல்விச்சேவைகள்ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை [illegible]

ணம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நால்வர் சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வட இலங்கை மருத்துவக்கல்லூரி இயக்குனர் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள ஆட்சேப கடிதம் நான்கு தமிழ் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டமை தெரிந்ததே.

இம்மாணவர்களை விடுதலை செய்ய உதவுமாறு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தையும், யாழ். அரசஅதிபரையும் அவர் கோரியுள்ளார்.

## வெலிக்கடைச் சிறைச்சாலை இடம் மாற்றப்படும்

(கொழும்பு)

நூற்றி நாற்பத்தெட்டு வருடங்கள் பழமைவாய்ந்த வெலிக்கடைச் சிறைச்சாலை இடம் மாற்றப்படவுள்ளது. அங்குள்ள சுமார் பத்தாயிரம் [illegible]களும் இடமாற்றப்படு[illegible] இந்தச் சிறைச்சாலையை [illegible]நகர்ப் பகுதியான ஹேம[illegible]ம மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்[illegible]து.

கொழும்பு நகரில் சுமார் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கும்வெலிக்கடைச்சிறைச்சாலையின் பெறுமதி சுமார் இருநூறு கோடி ரூபாவாகும் இத்தகைய பெறுமதிவாய்ந்த இடத்தை இவ்வளவு சிறு தொகையினருக்காக ஒதுக்கி வைத்திருப்பது வீண்வேலை என்று சிறைச்சாலைகளுக்கு பொறுப்பான அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என நாம் கேட்கவில்லை யுத்தம் தொடரத்தான் வேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வை முன்வைக்காமல் யுத்தத்தைத் தொடர்வதால் யுத்தம் வெற்றியடையப் போவதில்லை.

மேற்கண்டவாறு அண்மையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஓஸி அபய குணசேகரா குறிப்பிட்டார்.

அவர் தொடர்கையில், இலங்கைஇந்திய சமாதான உடன்படிக்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கான முழு அம்சத்தையும் கொண்டிருக்கவில்லைஎன்பதையும் குறிப்பிட்டார்.

மேலும் அரசியல்வாதிகள் தமக்கு வேண்டிய விதத்தில் சரித்திர வரலாற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் இதற்காக சரித்திர வரலாறு

## - ஓஸி அபயகுணசேகரா

திரித்துக் கூறப்படுகின்றது.

பெரும்பான்மை இனமக்கள் உண்மையை உண்மையாக ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் தமது உயிரை இழக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் பலமுறை சிங்கள அரசியல்வாதிகளினால் ஏமாற்றப்பட்டுள்ளனர். இதனால் தான் தமிழ்மக்கள் அரசியல் தீர்வைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். இந்த நிலைக்கு சிங்கள மக்கள் பொறுப்பேற்கவேண்டும் என குறிப்பிட்டார்.

## ஆயுதம்வைத்திருந்த பிக்கு நீதிமன்றத்தால் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கதிர்காமம், கதிரமலை விகாரை அதிபதியான இரத்மலானே சிறிசித்தார்த்த தேரோ விடுதலை செய்யப்பட்டார்.

இவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கிகள் வைத்திருந்தமை பயங்கரவாதத்திற்கு உதவிபுரிந்தமை போன்ற ஆறு குற்றச் சாட்டுக்களின் பேரில் விசாரணை செய்யப்பட்டார். இவ் வழக்கு 17 தினங்களாக விசாரிக்கப்பட்டு வந்தது 20.5.90 இவர் கைது செய்யப்பட்டு வழக்குமுடியும்வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் சார்பில் வழக்காடிய சட்டத்தரணிகள் வன் செயல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

பற்றிய [illegible] தாமதமடைந்துள்ளது தெரிவு செய்யப்பட்டவர்களது பட்டியல் ஏற்கனவே வடகிழக்கு மாகாண கல்வி [illegible] வில்லை. இதுவே மேற்படி நியமனத்திற்கானகாரணம் என்று கூறப்படுகிறது.

## தனிநபர்கொள்ளைபற்றி விபரம் வெளியிடுவேன்

### பிரேமதாசா

(கொழும்பு)

குறிப்பிட்ட சில தனிநபர்கள் எவ்வாறு பொதுச்சொத்துக்களை கொள்ளையடித்தார்கள் என்பதை விரைவில் நான் ஆதாரத்துடன் வெளியிடுவேன்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கடந்த செவ்வாயன்று யக்கலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் அவர்கள் பெருமளவு பணத்தை வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுஅவற்றைத் திருப்பிச் செலுத்தாது ஏமாற்றினார்கள் வரி ஏய்ப்புச் செய்தார்கள் தம்மிடம் வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம்கூட வழங்கவில்லை.

இப்பொழுது அவர்கள் என்னை தாக்குகிறார்கள் தூற்றுகிறார்கள் ஜே.வி.பி.யின் குண்டுகள் கூட எம்மை ஒன்றும் செய்யமுடியவில்லை இவர்கள் ஒரு பொருட்டல்ல என்று தெரிவித்தார்.

## வாழைச்சேனைப் பகுதியில் ஏழு தமிழரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் கடந்த [illegible]வாரத்தில் ஏழு தமிழர்கள் [illegible]காணாமல் போய்விட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கண்ணகி புரத்தைச்சேர்ந்த பெருமாள் லக்ஸ்மன், ஞானசித்திரன் வடிவேல், முத்துத்தம்பி பூலோகசிங்கம், வைரமுத்து முகாந்திரம், யூனியன் கொலனியைச் சேர்ந்த விநாயகர் அழகரத்தினம், புதுக்குடியிருப்பைச்சேர்ந்த எம். கோணேஸ்வரம், கந்தசாமி சாமிரத்தினம் ஆகியோரே காணாமல்போன ஏழுபேருமாவர்.

ஆயுதம் தாங்கிய குழுக்களால் இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனராம்.

## முஸ்லிம் இராணுவ பிரிவு சாத்தியமற்றதாம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தால் [illegible]னி முஸ்லிம் பிரிவு நிறுவுவது [illegible]த்தியமானதல்ல என்று [illegible]ழும்பில் நேற்று முன் [illegible] நடைபெற்ற வாராந்த [illegible]யாளர் மாநாட்டில் [illegible] சிறிலங்கா ஜனாதிபதி [illegible]யின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இராணுவம் என்பது முழுமையாக சிறிலங்கா இராணுவமாகவே இருக்கவேண்டும தமிழ் இராணுவம் என்றும், முஸ்லிம் இராணுவம் என்றும் பிரிக்க முடியாது என்று விளக்கினார்.

## சிறிமாவோ மன்னிப்பு கோரினார்

(கொழும்பு)

லங்கா தீப சிங்களப் பத்திரிகையின் நிருபர் சூலவன்ச சிறிலாலிடம்எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மன்னிப்புக்கோரியுள்ளார்.

அத்தனகலதொகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பல மண்டலயவினால் நிட்டம்புவவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தாக்கப்பட்டவரான நிருபர் சூலவன்ச சிறிலால் என்பவரை அழைத்து திருமதி பண்டாரநாயக்கா மன்னிப்புக் கோரியுள்ளார்.

## கிழக்கில் கைவிடப்படும் இராணுவக் காவலரண்கள்

(மட்டக்களப்பு)

கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பல காவலரண்கள் கைவிடப்பட்டு வருகின்றன விடுதலைப்புலிகளின் தாக்குதலிற்கு அஞ்சியே இவை இவ்வாறு கைவிடப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

புலிகள் தாக்குதல் நடாத்தக் கூடும் எனவும் எனவே கிழக்கில் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்துமாறும் இருவாரங்களுக்கு முன்னர் இராணுவ தலைமைப்பீடங்களால் இராணுவத்தினர் பணிக்கப்பட்டிருந்தனர்.

இதற்கு அமைய அங்கு பல புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுவந்தன அந் நிலைகளில் பலத்த காவலும் போடப்பட்டிருந்தது.

கடந்த புதன்கிழமை சாம்பல்தீவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்த அதேவேளை அதன் அருகிலிருந்த இரு காவலரண்களையும் தாக்கி அழித்தனர்.

இதனைத் தொடர்ந்து புதிய காவலரண்கள் இராணுவத்தால் கைவிடப்பட்டன.

## வனமின்றிப் போனால்-நம் இனமின்றிப் போகும்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிணற்றுப்பங்குடன் 8 பரப் புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்குஅல்வாய் [4773]

### தவறிவிட்டது

29-6-92 ஆம் திகதி சரவண முத்து மனோகரன் என்பவர் உடைய அடையாள அட்டையும், வியாபாரப்பாஸ் ஒன்றும் திறப்பு ஒன்றும் உள்ள பேஸ் சுன்னாகத்தில் இருந்து நீர்வேலி செல்லும் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (2930)

### விளையாட்டுப் போட்டி

பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் பதினாறு பாலர் பாடசாலைகளுக் கிடையே யான 21 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதியும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய இணைப்பதிகாரி பொ. பாலகிருஸ்ணனும் சமுகமளிக்கின்றனர்.

## தேவை

லேத் இயந்திர வேலையில் நல்ல அனுபவமுடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதாந்தம் ரூபா ஐயாயிரம் சம்பளமாக வழங்கப்படுவதுடன் சாப்பாடு வசதியும் செய்து கொடுக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர் மடுப் பிரதேசத்தில் கடமையாற்றக் கூடியவராக இருக்க வேண்டியது அவசியமான தாகும்.

தொடர்புக்கு :

**றொபேட் கராஜ்**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/4797)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 20 · 08 · 1975

தாரணியின் மடியில் 1 · 08 · 1991

### வீரவேங்கை அலெக்ஸ்

(செல்வன் பூபாலசிங்கம் பவளகாந்தன்)

ஆனையிறவுப் போரினிலே
ஆர்வமுடன் நீ இணைந்து
மண் மீட்கப் புறப்பட்டு
மா வீர ரானாய்
ஆண்டொன்று அழிந்ததடா
உன் நினைவலைகள் அழியவில்லை.

கச்சார் வெளி, பளை.

உன்பிரிவால் தவிக்கும்,
– குடும்பத்தினர்
(2924)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அரவணைப்பில்
02 – 06 – 1970



ஆனையிறவில் வரலாறாய்
01 – 08 – 1991

யாழ். தபால்கள்

## வன்னிப் பிரதேசம் செல்ல ஒருமாதம் செல்கிறது

(வவுனியா)

வன்னிப் பகுதிகளில் தபால் சேவை தொடர்ந்துசீர்குலைந்துள்ளது. இப் பகுதிகளில் உள்ளூர் கடிதங்கள்கூட பல நாட்களுக்குப் பின்னரே உரியவரிடம் சென்றடைகிறது.

வவுனியா கிராமப்புற உப தபாலகங்களில் பணிபுரியும் தபால் சேவகர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் பிரதம தபாலகம் சென்று கடிதப் பொதிகளைக் கொண்டு வருகிறார்கள். மற்றைய மூன்று நாட்கள் இவர்கள் தபால் விநியோகத்தில் ஈடுபடுகின்றனர் ஆயினும் ஒருவார, இருவார இடைவெளிக்குப் பின்னரே கடிதங்கள் உரியவரிடம் சென்றடைகிறது.

யாழ். குடாநாட்டிலிருந்து கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும் தபால்கள் வன்னிப்பகுதிக்கு ஒரு மாதத்தின் பின்னரே வந்து சேருகிறது. (தி)

## விமான பயணப்பொதிகளின் சோதனை முறையில் மாற்றம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் பிரயாணிகளின் பயணப் பொதிகளை சுங்கப் பரிசோதனைக்கு உள்ளாக்கும் நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய நடைமுறைகளின் படி பயணப்பொதிகளில் உள்ள பொருள்கள் சம்பந்தப்பட்ட பிரயாணியின் சொந்தப் பாவனைக்கு அல்லாமல் வர்த்தக ரீதியில் அமையும் பட்சத்தில் அவற்றைபரிசோதனைசெய்து தீர்வை அறவிடும் பொறுப்பு தற்போது கொழும்பு பூளுமெண்டால் வீதியில் இயங்கும் சுங்க முகவர் ஸ்தாபனமான 'ட்ரைகோ' ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் பாதுகாப்பு பொறுப்பாளர் லேலோரென்ஸ் தெரிவித்த ஆலோசனைக்கு அமையவே சுங்கப் பணிப்பாளர் நாயகம் புதிய நடைமுறையை அமுலுக்குகொண்டு வந்துள்ளார் என சுங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

புதியநடைமுறை அமுலுக்கு வந்ததனை அடுத்து வர்த்தக ரீதியிலான பல பிரயாணங்கள் ரத்துச் செய்யப்பட்டு விட்டன எனவும் இதனால் சிங்கப்பூர், பாங்கொக், மாலைதீவு, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையிலான பல விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் விமான நிலைய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

### குமண நாளை வரும்

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் வரும் குமண கப்பலில் வடபகுதிக்கான உணவுப் பொருள்கள் எடுத்துவரப் படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை இக்கப்பல் வந்து சேருமென தெரிவிக்கப் படுகிறது இதில் 2200 அடையாள அட்டைகள் 1500 மெ. தொன் மாவும், 1500 மெ. தொன் சீனியும் எடுத்துவரப் படுவதாகத் தெரிய வருகிறது.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
( வரையறுக்கப்பட்டது )

சகல அங்கத்தவர் கவனத்திற்கும்

**வாக்காளர் பட்டியல்**

எமது சங்கக் கிளைக்குழுத் தேர்தல் நடைபெறவுள்ளது. 30-06-92 இல் முடிவடைந்த வாக்காளர் பட்டியல் சகல வாக்காளர் பார்வைக்கும் ஒப்பொருவரும் அங்கத்துவம் வகிக்கும் கிளையில் 01-08 92 முதல் 11-08-92 வரை பார்வைக்கு வைக்கப்படும். இவற்றைப் பார்வையிட்டு ஆட்சேபனைகள் இருப்பின் மேற்படி சங்கச் செயலாளருக்கு 12-08-92 க்கு முன் எழுத்து மூலம் அனுப்பி வைக்கவும்.

பொ. கிருஷ்ணமூர்த்தி
சங்கானை ப.நோ. கூ. சங்கம். செயலாளர்
30 - 07 - 92 (சி/ 4902)

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவு சங்கம் திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

**பால் விலை அதிகரிப்பு**

எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்,

தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை ரூபா 18/- ஆக 1-8-92இல் இருந்து அதிகரித்துள்ளோம். அதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

(சி, 4803) - பதில்பொதுமுகாமையாளர்

## 1 ஆம் ஆண்டு வீர அஞ்சலி



### வீரவேங்கை சுதன்

இராசரத்தினம் ஜீவகுமார் (குமார்)
(பூவரசங்குளம், வவுனியா)

வீரப் பிறப்பு: 15-0 -1970

வீரச்சாவு: 01-08-1991

மறவனே—!...
மாலையில் முகைவிரித்த
மல்லிகை நீ
விடுதலைப் பூசையின்
ஊதுபத்தி நீ
ஆனையிறவில்
அணையாத தீபமாகி
ஆண்டொன்று ஆனதடா

சுதனே. !,
உன் பாதம் பதிந்த
வீரச் சுவடுகளில்
பாரதிகள் நின்று
காவியம் பாடுவார்
குருதி வர்ணம் கொண்ட
உன்
பாதச் சுவடுகளை
புதிய வேதங்களாய்
மண்ணில் காணுவார்

அந்த
நம்பிக்கைப் பாதையில்
நாமும் நடக்கிறோம்
விடியலின் காலையில்
நாளை
பூபாளம் இசைப்போம்.

இவருடன் வீரசாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கங்கள்.

தாவடி. (2929) - நண்பர்கள்

## நினைவுகூருகின்றோம் ..

### 1992 - 08 - 01

1989 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை - கச்சக்கொட்டைத்தீவுப் பகுதியில் இந்தியப் படையின குண்டான நோர்டிச்சமரில் வீரச்சாவெய்திய - கப்டன் ரஜனி [சின்னத்தம்பி புஸ்பராஜா - 2-வது குடியிருப்பு, கந்தளாய், திருக்கோணமலை]



வடமராட்சி தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி

## மேஜர் கணேஷ்

(வைத்திலிங்கம் துரைவடிவேல்)

இடைக்காடு அன்னை பெற்றுத் தொண்டைமான் ஆறு வளர்த்த
படைப்பிரிவின் தளபதியை பாசமுடன் நினைவுகொள்வோம்
பள்ளிப்படிப்பு விட்டுப் பாசறையைத் தேடியவன்
பாரில் தமிழ் ஈழம் படைக்க புலியாக மாறியவன்
மில்லர்த் தாக்குதலில் நெல்லியடி முகாம் சிதறுகையில்
வல்லையில் இராணுவத்தை வழிமடக்கித் தாக்கியவன்
களத்தில் கணேஷின் கரம் கனலைக் கக்கியது - அவன்
கழுத்தைச் சன்னமொன்று காயப்படுத்தியது
சிகிச்சைக்காய் சிலகாலம் தமிழ்நாட்டில் தங்கியபின்
சீறும் புலியாகப் புயலெனவே புறப்பட்டான்
கோட்டைச் சிங்களரின் கொட்டத்தை அடக்கவென
படைகொண்டு பகைமுடிக்கப் பாய்ந்தோடிச் சென்றான்
பரப்புக் கடந்தானில் படைகளினை நொருக்கியவன்
வரப்பு மீறி வந்த வானரரைத் துரத்தியவன்
ரஞ்சன் விட்ட பணிமுடிக்க தளபதியாய் ஆகியவன்
விஞ்சும் தன் வீரத்தால் வெற்றிகளைக் குவித்து நின்றான்
ஆனையிறவு முகாமமைப்பை உள்வறிந்து வந்து
சேனையோடு துணைத்தளபதியாய் படைகொண்டு சென்றான்
முற்றுகையை இட்டுப்பல படையினரை முடித்தான்
சுற்றுலா விடுதியிலே வெற்றிக்கொடி பொறித்தான்
பொருதும் போர்களத்தில் விழுப்புண்ணை ஏற்றும்
விருப்புடனே செருக்களத்தில் வீரச்சமராடி நின்றான்
வாடிநின்ற உடம்புடனே நாடிச்சென்று போர்புரிந்து
தேடிவந்த குண்டொன்றால் வீரச்சாவடைந்தான்
மரணத்தை வென்று கணேஷ் மாவீரனானான்
வரலாறாய் அவன் நினைவு எம்முடனே வாழும்
காவலரண் அமைக்கையிலே காவலாக நீ நின்றாய்
கனிவான நட்புடனே கதைகள் பல சொன்னாய்
ஓய்வுள்ள நேரத்திலே ஓடிவந்து கதைத்தாய்
தூய்மையான பாசமுடன் பழகியெமைக் கவர்ந்தாய்
தாய் மண்ணாம் இடைக்காட்டில் தனிப்பாசம் வைத்தாய் - நல்ல
சேயாகி மக்கள் தம் நன்மதிப்பைப் பெற்றாய்
பெற்ற மண்ணும் துடித்துநிற்க உற்றாரும் கலங்கிடவே
பற்றுவைத்துப் பழகிவிட்ட உன்முகம் தான் மறந்திடுமா?
தாக்குதலன் தளபதியே தானைகட்கு அதிபதியே
தரணியிலே உனது புகழ் எம் நெஞ்சத்தில் நிலைக்கும்

"MASS"
மாணிக்க இடைக்காடர் வீதி,
இடைக்காடு.

இடைக்காடு வாழ் நண்பர்கள்.

[2877]

---

'உளவளத்துணை நிலையம்' நடாத்தும்

குறுகியகால உளவளத்துணை

## பயிற்சித் திட்டம்

இப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்,

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் :

'சாந்தியகம்'
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்குக் கடிதமூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகஸ்ட் 20 - 1992 ஆகும்.

- நிறைவேற்றுப் பணிப்பாளர்

(2928)

---

## நாடகம்

01-08-1992 இன்று சனிக்கிழமை
மாலை 7-30 மணிக்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியில்

## "காணி நிலம் வேண்டும்"

(நாடகம்)

யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் மாதாந்த கலை நிகழ்ச்சியை முன்னிட்டு இந்த நாடகம் அரங்கேற உள்ளது.

அன்பார்ந்த
தமிழீழ மக்களே திரண்டு வருவீர்.

[சி/4798]

---

...படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் எதிர் பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமுற்று, மந்திகை மருத்துவமனையில் எமைப்பிரிந்த

**காண்டீபன்** (சுப்பையா பாலகிருஸ்ணன் - தாவடி)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட கரடியனாறு உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதேபகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

கிளிநொச்சி லக்சபானாச் சந்தியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவனாகிய உதயநகரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

யாழ் திருநெல்வேலியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு-சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

வடமராட்சித் தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி

**மேஜர் கணேஷ்** (வைத்திலிங்கம் துரை வடிவேல் - உப்பு வல்லை வீதி, தொண்டமானாறு)

**லெப். கண்ணன்** (நாகமுத்து கலியுகவரதன் -உடுத்துறை தாளையடி)

**லெப். உபாலி** (இராசதுரை பிரபாகரன் - 2 ஆம் கண்டம், முத்தையன் கட்டு, முல்லைத்தீவு)

**2-ம் லெப். கஸ்ரோ** (நடேசபிள்ளை சுபாகரன் 162-ம் கட்டை, கண்டி வீதி, பரந்தன், கிளிநொச்சி.)

**சுதன்** (இராசரத்தினம் ஜீவகுமார் - பூவரசங்குளம், வவுனியா.)

**அசோக் ரவி** (கதிர்காமநாதன் ரகுநாதன்-சங்கத்தார் வயல், இயக்கச்சி, கிளிநொச்சி.)

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா ஊர் காவற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தளவாயைச் சேர்ந்த தமிழ்க் கடற்தொழிலாளி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4801]

சிந்தனைக்கு

நாடுகள் பெரும் தன்மை பயிலும் வரை
விவேகம் எய்த இயலாது
வாஷிங்டன் இர்விங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## 'சொந்த மண்'

"கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புலிகள் கிழக்கில் திடீர் திடீரெனப் பாரிய அளவில் தாக்குதல் நடத்துவதை அடுத்தே இம்மாற்றம் வரவுள்ளது. இதேவேளை கிழக்கில் புலிகள் பரவலாக உள்ளார்கள், அவர்கள் கெரில்லாத் தந்திரோபாயத்தைக் கையாள்கின்றார்கள். ஆனால் கிழக்கில் பாரிய அளவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது சாத்தியமற்றதும், அவசியமற்றதும் ஆகும்." இவ்வாறு பத்திரிகையாளர்கள் மாநாட்டில் பேசிய கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக பேச்சாளரான கேணல் முன்சிங்கா தெரிவித்தார்.

கேணல் முனசிங்காவின் இக்கூற்றானது கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து இராணுவத்தினருக்கு ஏற்பட்டுவரும் பாரிய இழப்பைத் அடுத்து வெளிவந்ததாகும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் அதிரடித் தாக்குதல்கள் பற்றி இதற்கு முன்னரே பல தடவைகள் இராணுவத் தரப்பால் விமரிசிக்கப்பட்டும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டும் வந்தது. ஆனால் இராணுவம் எடுத்த நடவடிக்கை வெற்றி எதுவும் அளிக்கவில்லை. புலிகள் தொடர்ந்தும் வெற்றிகரமாக தாக்குதலை நடத்தி வருகின்றனர். இது இராணுவத்தரப்பில் ஆச்சரியத்தையும் அதேவேளை சலிப்பையும் ஏற்படுத்தி உள்ளது. சலிப்படைந்த ஒரு இராணுவ அதிகாரி "புலிகள் கையாளும் போர்த் தந்திரமானது எந்தவித இராணுவ புத்தகத்திலும் இல்லை. என்னால் அதைப் பார்க்கவும் முடியவில்லை"எனத் தெரிவித்தார்.

இதில் விடுதலைப்புலிகள் இயக்கம்உலகிலுள்ள ஏனைய இயக்கங்களில் இருந்து வேறுபடுவதாகத் தெரிகின்றது. புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் ஒவ்வொன்றும் துணிகரம் மிக்கவை. 'சரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையில் மேற்கொள்ளப்படுபவை. இந்நிலையில் தற்காப்பு நிலையிலிருந்து போர் யுக்திகளை வகுத்துள்ள இராணுவ வல்லுநர்களின் புத்தகங்களில் புலிகளின் போர் யுக்திகள் இடம்பெறாமல் போவது என்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லைதான்.

ஆனால், ஓர் தேசிய இனப் போராட்டத்தை

# மதுரையில் ஒரு 'கட்-அவுட்' மாநாடு

மதுரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அண்மையில் நடத்திய மாநாடு பற்றிய செய்திகள் திகைப்பூட்டுபவையாகவே உள்ளன.

மாநாட்டில் உள்ள பந்தலைத் தாங்கி நிற்கும் ஒவ்வொரு கம்பத்திலும் தொங்க விடுவதற்கென பிரமாண்டமான ஜெயலலிதா வண்ணப் படங்களுக்காக மட்டும் சுமார் ஏழு லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கோபுரங்களுக்கு இணையான உயரத்தில் எழுந்து நிற்கும்படியாக சுமார் நூற்றிஐம்பது அடி உயரத்தில் ஜெயலலிதாவின் உருவப் படம் பொறித்த கட் - அவுட்டுகள்நான்குஅமைக்கப்பட்டன இந்த கட் அவுட்டுக்களுக்கான மாடல் புகைப்படங்களை ஜெயலலிதா தானே பிரியத்தோடு தெரிவு செய்தாராம்.

இந்தக் கட் - அவுட்டுக்களையும் இதனோடு சேர்த்து இன்னும் நூற்றுக்கணக்கான கட் அவுட்டுக்களையும் தயாரிக்கும் பட்டறையாக மதுரையின் மிகப் பெரும் மைதானங்களில் ஒன்றான தமுக்கம் கலையரங்கம் செயல்பட்டது. ஒவ்வொன்றும் ஐம்பது அடிமுதல் எண்பது அடி உயரம் வரையிலான கட் - அவுட்டுகள்.

இதை விட மதுரையின் நான்கு புறங்களிலும் பறக்க விடப் படுவதற்காக ஜெயலலிதாவின் உருவம் வரைந்த பத்து ராட்சத பலூன்கள் தயார் செய்யப்பட்டன. "மதுரையில் எங்கு நின்று பார்த்தாலும் அம்மாவுடைய உருவம் தெரிய வேண்டும்." என்றுசபதமிட்டவாறே அமைச்சர் செங்கோட்டையன் இந்தப் பணிகளை நேரடிக் கண்காணிப்பு செய்தார். பிரபல ஓவியர் கே. பி. கிருஷ்ணா சென்னையிலிருந்து நூற்றைம்பது உதவியாளர்களுடன் வந்து மதுரையில் தங்கி கட் அவுட்டுகள் தயாரிக்கும்பணியில் ஈடுபடுத்தப்பட்டார்.

இந்த மாநாட்டிற்காக செய்தித்தாள்களில்விளம்பரங்கள் தருவதற்கு மட்டும் அறுபது லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. இதைவிட மாநாடு நடந்த நாட்களில் ஜெயலலிதா ஆட்சியின் ஓராண்டு சாதனை பற்றி விளக்கும் விளம்பரங்களுக்கு அரசாங்க சார்பில் ஆறு முன்னணித் தினசரி பத்திரிகைகளுக்கு ஆர்டர் தரப் பட்டது.

மாநாட்டிற்காக திகைப்பூட்டும் வகையில் மிகப் பெரிய பந்தல் அத்துடன் அலங்கார வளைவுகள், பதாதைகள், ஆறே ஆறுஅடி இடைவெளிக்கு ஒன்றாக மைல் கணக்கான நீளத்திற்கு ஜெயலலிதா படங்கள் அச்சிட்ட போஸ்டர்கள் தட்டிகளில் வைக்கப்பட்டன.

மேலும் இந்த மாநாட்டில் வைத்துநூறுகிலோஎடையுள்ள வெள்ளிச் சிம்மாசனமும் தங்க மூலாம் பூசப்பட்ட கிரீடமும் ஜெயலலிதாவுக்கு வழங்கப் பட்டது.

மதுரை மாநாட்டின் முதல் நாளன்று மட்டும் எழுபந்தைந்து லட்சம் உணவுப் பொட்டலங்கள் தயாராகின. இந்தச் சமையலுக்கென விசேட சமையற்காரர்கள் செட்டிநாட்டிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

## ஆளுக்கொரு ஸ்டைல்

அ. தி. மு. க. கட்சிப் பிரமுகர்களும் அமைச்சர்களும் ஆளுக்கொரு ஸ்டைலில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் காலில் விழுந்தார்கள்.

மதுசூதனன்: நேராகப்போய் முதல்வர்முன் நின்றார். திடீரென வேரறுந்த மரம் மாதிரி தடாலென விழுந்து எழுந்தார்.

செல்வ கணபதி: கைகளைத் தலைக்கு மேல் நீட்டியபடி நெடுஞ்சான் கிடையாக!

கு. ப. கிருஷ்ணன்: பெண்கள்போல் முழங்கால் போட்டுக் குனிந்து.

செங்கோட்டையன், கண்ணப்பன், அழகு திருநாவுக்கரசு: இந்தி சினிமாக்களில் அம்மாவிடம் ஆசி வாங்குகிற கதாநாயகன் மாதிரி சட்டென்று வளைந்து காலைத் தொட்டு நிமிர்ந்து கண்களில் ஒற்றிக்கொண்டனர்.

முத்துசாமி, விஸ்வநாதன்: மைக்கில் பேசப்போகும் முன் கை குவித்து வணங்கினர்.

எஸ். டி. எஸ்., கே. ஏ. கே.: இதில் ஏதும் இல்லை. மாநாட்டுக் கடைசியில் பரிசுபெற வந்தபோது நடிகர் குண்டு கல்யாணம் தடாலென விழுந்து கும்பிட ஜெயலலிதா பயந்துபோய் நகர்ந்தார்.

—நன்றி ஜூனியர் விகடன்

### ஓராண்டு ஆட்சி பற்றிய முணுமுணுப்பு

ஜெயலலிதா ஆட்சியின் ஓராண்டு பூர்த்திபற்றி மக்கள் மத்தியில் பலமான முணுமுணுப்புக்களே காணப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

பால்விலை, மின்சாரக் கட்டணம், பஸ்கட்டணம் என்பவை உயர்த்தப் பட்டதோடு, நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும் பொருள்களின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொலை, கொள்ளை, பாலியற்பலாத்காரம் உட்பட அனைத்து வகையான குற்றங்களும் அதிகரித்துள்ளன. கண்டுபிடிக்கப் படாத மர்மம் நிறைந்த வழக்குகள் அதிகரிப்பதோடு பொலிஸ் நிலையங்களே குற்றச் செயல்கள் நிகழும் இடமாகவும்மாறியுள்ளதுமக்களின் இந்த வகையான முணுமுணுப்புகளுக்கு மத்தியில் இந்த மாநாடு ஏன் நடத்தப்பட்டது என்பது இங்கு கேள்வியாகிறது.

### "வீர வரலாற்றின் வெற்றி மாநாடு"

நெருப்பு ஆற்றில் நீந்தி வந்த அ. தி. மு. கவின் வரலாற்றை நினைவு கூரும் வெற்றி மாநாடு என்று ஜெயலலிதா மதுரை மாநாட்டை வர்ணித்தார். இதில் எந்த நெருப்பு ஆற்றை எத்தகைய வீரத்தோடு ஜெயலலிதா நீந்திக் கடந்தார் என்பது ஒருபுறமிருக்க, இந்த மாநாடு நடத்தப்பட்டதன் உண்மையான நோக்கங்கள் குறித்து பலவாறான ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

காந்திஜெயந்தி போல ஜெயா ஜெயந்தி கொண்டாட வேண்டும் என்று ஆசைப்பட்டவர்களின் விருப்பத்திற்கு இணங்கி ஆட்சி நிறைவின் ஓராண்டு கொண்டாடப்பட்டதாகப் பொதுவாகச் சொல்லிக் கொள்ளப்பட்டது. ஆனாலும், டில்லிக்கு எச்சரிக்கை தரும் விதத்திலேயே மாநாடு நடத்தப்பட்டதாம்.

முன்பு ஏதோ ஒரு முறை குறிப்பிட்ட ஒரு விடயத்தில் அதிருப்தி ஏற்பட்ட போது 'ஆதரவு வாபஸ் பெறப்படும்' என்ற செய்தியை அ.தி.மு.க ராஜ்யசபை உறுப்பினர் ஒருவர் மூலமாக நரசிம்மராவுக்கு ஜெயலலிதா அனுப்பினாராம் அதற்குப் பதிலளித்த நரசிம்மராவ் 'அது பற்றிக் கவலையில்லை' எனக் கூறியிருந்தாராம்.

அத்துடன் அ. தி. மு. க— காங்கிரஸ் கடைப்பிடிக்கும் தேனிலவு போக்கு முடிவடைய வேண்டும் என்று தமிழக காங்கிரஸிலும் சிலர் கருதுவதாக தெரிகின்றதாம். இவ்வாறான நிலைமைகளால் அரசின் மீது ஜெயலலிதாவுக்குச் சந்தேகம் தோன்றியுள்ளதாம்.இதனால் டில்லியைப் பயமுறுத்துவதற்குத்தான் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதாக பலமாக நம்பப்படுகிறது.

அதாவது மாறிவரும் அரசியல் சூழ்நிலையில் தன்னுடன் மத்திய அரசு மோத நினைத்தால் அது சரிப்பட்டு வராது என்றுதெரியப்படுத்தவே ஜெயலலிதாமதுரையில்மாநாட்டை நடத்தினாராம். இத்தகைய மோதலுக்கு காங்கிரசும் டில்லியும் தயார் என்றால் அ. இ. அ.தி.மு.கவும் தயார் என்று 'வீரவரலாற்றின் வெற்றி மாநாடு' காட்டியிருக்குமாம்.

ஆனால் இதற்கான ஏற்பாடுகளில் கட்- அவுட்டுகள் சரிந்து போனதால் உயிரிழந்து போன அப்பாவி மக்களின் உயிர்களைப்போல பாதுகாப்பு ஏற்பாடு என்ற பெயரில் போக்குவரத்து சீர்குலைவால் பாதிக்கப்பட்ட பொது மக்களின் முணுமுணுப்பைப் போல தமிழக மக்களின் உணர்ச்சிகளும் கவர்ச்சி மாநாட்டினால் அடக்கப்பட்டு விடப்போவதில்லை என்பது மட்டும் தெளிவானது.

(தமிழக சஞ்சிகைகளிலிருந்து தொகுக்கப்கட்டது.)

தாண்டிக்குளம் அகதிமுகாம்

## காற்றினால் வீழ்ந்ததால் பலர் படுகாயம்

தாண்டிக்குளம் விவசாயப் பாடசாலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம் காற்றினால் வீழ்ந்ததினால் பலர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் பலத்த காற்றிற்கு இந்த அகதி முகாம் தகர்ந்து போனது

தமிழகத்திலிருந்து வரும் அகதி மக்களை தங்க வைப்பதற்காக இந்த அகதி முகாம் கடந்த ஏப்பிரல் மாதம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சுமார் நூறு அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட இந்த முகாமில் நூற்றுற்கணக்கான மக்கள் வசித்து வந்தனர்

செங்கற்களினால் கட்டப்பட்டு,கிடுகினால் மேயப்பட்டிருந்த இம் முகாம் முறிந்து விழுந்த போது ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலர் கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுள்ளனர். (தி

## சிறுதானிய கொள்வனவு

# அணிசேரா நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பவில்லை

## -ஐ. நா.வின் பொருளாதாரத்தடை காரணம்

-- சதாம் குசைன்

(பாக்தாத்)

ஈராக்கிற்கு எதிராக ஐ நா பொருளாதாரத் தடை விதித்துள்ளதன் காரணமா இந்தோஷியாவில் நடைபெறவிருக்கும் மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மாநாட்டில் தம்மால்

'உலகின் ஒரே வல்லரசான அமெரிக்காவின் செல்வாக்கை மண்டல சார்பற்ற இயக்கத்தினால் மாற்ற முடியும் என நான் கருதவில்லை' என்றும் தெரிவித்தார்.

ஏ. என். சி. நடத்தும்

ஆனால், ஓர் தேசிய இனப் போராட்டத்தை இராணுவ பலம் கொண்டு நசுக்கிவிட முடியாது என்பதை உலக வரலாறுகள் பல போதிக்கின்றன அத்தோடு புலிகளின் யுத்த தந்திரோபாயங்களும் மனோதிடத்தையும் நேரடியாகப் புரிந்து கொள்ள இது முதல் சம்பவமும் இல்லை. 1983-1987யூலை வரையும் புலிகளுடன் மோதி சிறிலங்கா இராணுவம் நேரடி அனுபவத்தைப் பெற்றது. அதன் பின்னர் 1987 யூலையில் இருந்து 1990 மார்ச் வரை இந்திய இராணுவம் அனுபவத்தைப் பெற்றது. பின்னர் 1990 யூனிலிருந்து இன்றுவரை சிறிலங்கா இராணுவம் யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால் இவை ஒன்றையும் இராணுவத்தரப்பு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இந்திய இராணுவம் புலிகளுக்கு எதிராக ஒன்றன் மேல் ஒன்றாக பல தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திய போதும் சிறிலங்கா இராணுவமோ, அரசாங்கமோ இந்தியாவையும் நம்பவில்லை. இந்தியா தம்மை ஏமாற்றுவதாகவே அவை கருதின.

இதன் வெளிப்பாடே கடந்த மார்ச்சில் முப்படைத் தளபதிகளிடம் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கப்பட்ட போது சிலநூறு புலிகள் கிழக்கில் உள்ளார்கள் மூன்று மாதகாலத்தில் கிழக்கில் புலிகள் ஒழிக்கப்படுவார்கள் முதலில் இராணுவ நடவடிக்கைகள் கிழக்கிலேயே மேற்கொள்ளப்படவுள்ளது என்ற அறிவிப்பாகும். ஆனால் தற்பொழுது சுமார் நான்கு மாதங்களின் பின்னர் கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் தெரிவித்துள்ளமை இராணுவத்தளபதியின் பேச்சிற்கு எதிர்மாறாக இருக்கின்றது. கேணல் முனசிங்காவின் கூற்றுப்படி புலிகள் கிழக்கில் பரவலாக இருப்பினும் அவர்களை அழிப்பது சாத்திய மற்றதும் அவசியமற்றதும் ஆகும். இதில் உண்மையாதெனில் 'சாத்தியமற்றதே' என்பதாகும்.

இந்நிலையில் கிழக்கில் எந்த விதமாகவும் இராணுவ நடவடிக்கைகளை மாற்றி அமைப்பினும் புலிகளை வெற்றி கொள்ள முடியாது ஏனெனில் இது அவர்களின் சொந்தமண். அவர்கள்கைக் கொள்வதே இராணுவ புத்தகங்களில் இடம்பெறாத அவர்களின் சொந்த போர் யுக்திகள் அவர்களின் மனோதிடமோ உலகில் எவரிடமும் காணமுடியாதவை. ஆகையினால் அந்நியர்கள், ஆக்கிரமிப்பாளர்களால் அவர்களைவெற்றி கண்டுவிடமுடியாது.

## செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியாளர்களின் நன்மை கருதி சிறுதானியங்களிற்கு நியாய விலைகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.செயலக அதிகாரிகள், விவசாயத்திணைக்கள அதிகாரிகள், விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்படி நடவடிக்கைக்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி நடவடிக்கையில் யாழ். செயலக அதிகாரிகள் இறங்கியிருக்கின்றனர்.

## எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்காலிகமாக நியமனம் வழங்கப்பட்டிருக்கும் எழுது வினைஞர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளது.

மாகாண எழுதுவினைஞர் சேவையின் கீழ் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப் பட்டு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டிருப்பவர்களுக்கும் மேற்படி போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு விரைவில் நியமனம் வழங்கப்பட உள்ளவர்களும் நிரந்தரமாக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு சென்று யாழ். திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்படி நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மிக விரைவில் நிரந்தர நியமனத்திற்கான கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை சுமார் 145 பேர் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். தபால் திணைக்களத்திற்கு 21 பேரும், இலங்கை வங்கிக்கு சுமார் 25 பேரும், தேசிய சேமிப்பு வங்கிக்கு 6 பேரும் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர். மக்கள்வங்கியில் உள்ள வெற்றிடங்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. சேகரிக்கப்பட்டவுடன் மக்கள் வங்கிக்கும் கணிசமான அளவு நியமனங்கள் வழங்கப்பட உள்ளது என்றும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேற்படிநியமனங்கள்பெற்ற புள்ளிகளை வைத்து முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் இவ்வாறு சுமார் 200 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட உள்ளது. ஏனையோர் அரச திணைக்களங்களில் இருக்கும் வெற்றிடங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு நியமனங்களைப் பெறுபவர்கள் தற்போது வர்த்தமானி மூலம் கோரப்பட்டிருக்கும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க, ச, 35)

கலந்து கொள்ள முடியாதிருப்பதாக ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைன் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் ஆறாம் திகதி வரை மண்டல சார்பற்ற உச்சி மாநாடு இந்தோனேஷியத் தலைநகர் ஜகர்த்தாவில் நடைபெறவுள்ளது.

மாநாட்டிற்கான அழைப்பைக் கொண்டுவந்த இந்தோனேஷியத் தூதரிடம் சதாம் தனது இயலாமை குறித்து தெரிவித்தார்.

''நாங்கள் மண்டல சார்பற்ற மாநாட்டில் தீவிரமாகக் கலந்துகொள்வோம். ஆனால் நான் நேரில் வந்து இதர நாடுகளில் முடங்கியுள்ள ஈராக்கிய விமானங்களை உபயோகிக்க அனுமதிக்கும்படி அமெரிக்காவைக் கோருமாறு கூறி மாநாட்டை சங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை' என சதாம் கூறினார்.

## புதிய நியமனம் தேவை

[சிக்காகோ]

அமெரிக்க உப ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடவுள்ள டான்குவேலை நீக்கி விடுமாறு பிரபல அமெரிக்க பத்திரிகையான 'சிக்காகோ ட்ரிபியூன்' ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை வலியுறுத்தியிருக்கிறது.

1992ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் புதியவர் ஒருவரை உப ஜனாதிபதியாகப் போட்டியிட ஜனாதிபதி வகை செய்ய வேண்டும் என்றும் இதனையே மக்கள் விரும்புகின்றனர் என்றும் அப்பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

டான்குவேலை 1988 ஆம் ஆண்டு புஷ் தெரிவு செய்தார்.

## ஆட்சேப ஆர்ப்பாட்டம் ஐ. நா. கண்காணிக்க அனுமதி

(ஜெனீவா)

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் அடுத்த வாரத்தில்நடத்தவிருக்கும்மக்கள் செயல் திட்ட நடவடிக்கைகளை ஐ. நா. பார்வையாளர்கள் கண்காணிக்க தென் ஆபிரிக்க அரசு முதன் முதலாகஅனுமதிஅளித்துள்ளது.

அரசியல் சீர்திருத்தங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ள ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் மக்கள் செயல் திட்ட இயக்க நடவடிக்கைகளை ஐ. நா. அதிகாரிகள் மேற்பார்வை இடுவதற்கு தென் ஆபிரிக்க அரசாங்கம் முதன்முறையாக அனுமதிக்கவுள்ளது. ஐ. நா. தலைமைச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ்காலி இதனைச் செய்தியாளர்களிடம்தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்தில் நடைபெறவிருக்கும் பொது வேலை, நிறுத்தம், ஆட்சேப ஆர்ப்பாட்டங்கள்,என்பனவற்றைக் கண்காணிப்பதற்கு குறைந்தது பத்து பார்வையாளர்கள் அனுப்பப்படவுள்ளார்கள். தென் ஆபிரிக்காவிற்கானஐ.நா.வின் விசேட தூதுவரான சைரஸ் வான்ஸ் இந்தப் பார்வையாளருக்கான செயல் திட்டத்தை தயாரித்து வருகின்றார்.

## பெற்றோர் கவனயீனம் இரு குழந்தைகள் மரணம்

(டோக்கியோ)

இரு வெவ்வேறு சம்பவங்களில் இரண்டு ஜப்பானியக் குழந்தைகள் அநியாயமாக மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளன.

31 வயதான எமொட்டாவும்; 23 வயதான அவர் மனைவியும் தமது எட்டு வயதுக் குழந்தையை காரில் என்ஜினும், குளிரூட்டியும் செயற்பட்டுக் கொண்டிருந்த நிலையில் விட்டுப் பூட்டிவிட்டு கிளப்பொன்றுக்கு விளையாடப் போய்விட்டனர். எனினும் ஒரு மணி நேரத்தின் பின்னர் அவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது குழந்தை இறந்து கிடக்கக் காணப்பட்டது என்ஜினும், குளிரூட்டியும் செயற்படாது இருந்ததுடன் காரின் வெப்பநிலையும் 55 பாகை (சென்ரிகிரேட்) வரை உயர்ந்து இருந்தது. அதிகரித்த வெப்பநிலை குழந்தையின் மரணத்திற்கு காரணம் என்று விசாரணைகளில் அறிவிக்கப்பட்டது.

இதேபோல இன்னுமொரு சம்பவத்தில் பத்துமாதம் மட்டுமேயுடைய ஜுன்ஸி அரிகா என்னும் குழந்தையும் அவளது இரண்டு வயதுடைய தமையனும் காரில் பெற்றோரால் பூட்டப்பட்ட நிலையில் மூன்று மணி நேரம் விடப்பட்டனர். எயார்கெண்டிசனரிலிருந்துஉஷ்ணத்தைக் கக்கில் கொண்டிருந்தநிலையில் நாவரட்சி ஏற்பட்டு பத்து மாதக் குழந்தை உயிர் துறந்தது.

டோக்கியோவில் இத்தகைய மரணங்கள் அதிகரித்து வருவதாகப் பொலிசார் கவலை தெரிவித்துள்ளனர்.

ஈழநாதம்

## தென்னாபிரிக்க பொலிசாரினால்

# நூற்றுக் கணக்கில் கைதிகள் சிறைச் சாலையில் கொலை

(ஜொகான்னஸ் பேர்க்)

தென்னாபிரிக்காவில் காவலில் வைக்கப்பட்டிருந்த இருநூறு பேர்களின் சடலங்களை பரிசோதனை செய்த வைத்திய நிபுணர் ஒருவர் மாண்டவர்களில் தொண்ணூறு சதவிகிதத்தினர் பொலிசாரால் கொல்லப்பட்டிருப்பதாகதெரிவித்திருக்கிறார்.

தென்னாபிரிக்க அரசாங்கம் வெள்ளையர் ஆட்சியை நீடிக்கும் வகையில் கறுப்பர் வாழும் நகரங்களில்பலாத்காரத்தைத் தூண்டி வருவதாக ஆபிரிக்க காங்கிரஸ் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் அரசாங்கம் இப்படுகொலை குறித்து விசாரணை நடத்தப் போவதாய் உறுதியளித்துள்ளதாம்.

சோகமான சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்று வருகின்றன. 200 பேர்களில் 90 சதவிகிதத்தினர் பொலிசாரால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றும்,

வாரம் ஒருமுறை பிரேதப் பரிசோதனை செய்யுமாறு தாம் கோரப்பட்டதாகவும். இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு பலமணி நேரத்திற்குப்பின் மோசமாகத் தாக்கப்பட்டிருப்பதைக் கண்டவுடன் விஷயத்தை அம்பலப்படுத்த தாம் தீர்மானித்ததாகவும் அந்த வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க்சட்ட அமைச்சர் கிரியெல், பொலிஸ் கமிஷனர் மேர்வி ஆகியோருக்கு தான் செய்த முறைப்பாடு பலன் அளிக்கவில்லை. இது சம்பந்தமாக ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஈராக்கை தாக்குவதற்கு 70வீத அமெ. மக்கள் ஆதரவு

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு எதிராக தவிர்க்க முடியாத உடனடித் தாக்குதல் நடத்தும் திட்டம் இல்லை என்றும், ஆனால் அவசியமானால் அமெரிக்க மக்களின் ஆதரவுடன் எந்நேரமும் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்புமைச்சர் டிக் ஜெனி தெரிவித்துள்ளார்.

தற்போது நெருக்கடி சற்று தணிந்திருப்பதால் உடனடித் தாக்குதல் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

ஏறத்தாழ நாற்பது யுத்தக் கப்பல்கள் வளைகுடாவிலும் அண்மையிலும் உள்ளன. நெருக்கடி தணிந்திருப்பதால் மூன்றாவது விமானத்தாங்கிக் கப்பல் திட்டமிட்டபடி அங்கு அனுப்பப்பட மாட்டாது என்றும்,

சதாமுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதை எழுபதுசதவிகித அமெரிக்க மக்கள் விரும்புகிறார்கள் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

## பாகிஸ்தானுக்கு ஆயுதம் அமெ.செனட்டர் கண்டனம்

(டில்லி)

பாகிஸ்தானுக்கு வர்த்தக ரீதியில் குறிப்பிட்ட அளவு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அனுமதித்தமைக்காக அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்தை முக்கியமாக மூன்று அமெரிக்க செனட்டர்கள் குறைகூறியுள்ளனர் ஜான்கிலன், அலன்பிரான்சின், லாறிபிறெஸ்லர்என்னும் அந்த மூன்று செனட்டர்களும் செனட் வெளியுறவுக் கமிட்டியின் முன்பாக சாட்சியமளிக்கையில் சீர்திருத்தத்தின் அம்சங்கள் மீண்டும் மீண்டும் மீறப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளனர் இதனைச் சுட்டிக்காட்டி இந்த மூன்று செனட்டர்களும் அமெரிக்க வெளியுறவுச்செயலர் ஜேம்ஸ் பேக்கருக்கு கடிதமொன்றையும் எழுதியுள்ளனர்.

### சுட்டுக்கொலை

(பஞ்சாப்)

காலிஸ்தான் விடுதலைப் படைத் தலைவரும் ஸ்தாபகருமான குஜாதீன் புஷ்சிங் தாலா கடந்த செவ்வாயன்று இந்தியப் பொலிசாருடனான மோதலில் கொல்லப்பட்டார் என இந்திய வானொலி அறிவித்தது.

## ஒலிம்பிக் போட்டியில் சாதனைகள் முறியடிப்பு

(பார்ஸிலோனா)

பார்ஸிலோனாவில் நடை... கான ஊட்ட மருந்துகளை (...)

### உப ஜனாதிபதி வேட்பாளர்

(டில்லி)

இந்திய உப ஜனாதிபதி பதவிக்கான வேடபாளராக கே. ஆர் நாராயணனின் பெயரை இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளது என்று இக் கட்சியின் பொதுச் செயலாளர் வி.என். கார்டியல் தெரிவித்துள்ளார்.

தேசிய முன்னணி இடதுசாரிகள் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியும் முன்னாள் மத்திய அமைச்சரான கே.ஆர். நாராயணனுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இந்த தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இன்றாகும்.

### திருவிழா

(கொழும்புத்துறை)

மருதமடு திருப்பதியில் ஆவணித் திருவிழா எதிர் வரும் 6 ஆம் திகதி வியாழக் ...

## ஊவாப் பிரதேசத்தில் 10 தமிழர்கள் கைது
### – ஆட்சேபித்து வேலை நிறுத்தம்

(கொழும்பு)

ஊவாப் பகுதியில் சந்தேகத்தின் காரணமாக சண்முகம் ரவிச்சந்திரன் (வயது 26), கந்தையா பஞ்சநாதன் (வயது 32), பெருமாள் ராஜவேல் (வயது 28) ஆகிய மூவரும் சிவிலுடையில் வந்த புலனாய்வு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை களவரல்ல குரூப்டைச் சேர்ந்த சி. வி. ஈ. டிவிஷனில் வைத்து கடந்த ஞாயிறன்று இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை பண்டாரவளை அம்பிட்டிகந்த தோட்டத் தொழிலாளர்களும் ஏழு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் கைதுகளைஎதிர்த்து பண்டாரவளைப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஏழாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் இக் கைதுகளுக்கு தோட்ட நிர்வாகத்தினர் பொலிசில் கொடுத்த புகார்களே காரணம் என்றும் தெரியவருகிறது.

இதனிடையே தோட்ட நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுள்ள கம்பெனிகள்தோட்டங்கள் தோறும் புதுப்புது நடைமுறைகளைப் புகுத்தி வருகின்றமையை ஆட்சேபித்து அப்புத்தளைப் பகுதியைச் சேர்ந்த தம்பேதன்னை, பிட்ரத்மலை, அப்புத்தளை கிளனூர், இதழ்கஸ்தன்ன, போவோ, கூடலேரியா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 28 டிவிஷன்களிலுமுள்ள இருபத்திரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில்ஈடுபட்டுள்ளனர்.

## ஒலிம்பிக்போட்டிகள் -1992

பார்ஸிலோனாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25ஆவது ஒலிம்பிக் போட்டிகளிற்கான இறுதி முடிவுகளின் படி தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட நாடுகளின் பதக்க விபரங்கள் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திரக் குடியரசின் பொதுநலஅமைப்பு | 19 | 08 | 10 |
| அமெரிக்கா | 11 | 12 | 10 |
| சீனா | 07 | 10 | 04 |
| ஹங்கேரி | 06 | 04 | 01 |
| தென்கொரியா | 05 | — | 02 |
| ஜெர்மனி | 04 | 05 | 09 |
| அவுஸ்திரேலியா | 03 | 03 | 03 |
| போலந்து | 03 | 03 | 01 |
| ஜப்பான் | 02 | 02 | 04 |
| கியூபா | 02 | 02 | 02 |
| துருக்கி | 02 | 01 | — |

## உற்சவ ஏற்பாடுகள் பற்றி நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தின் போது சேவையாற்றும் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாத்திரிகர்களுக்கு இயன்ற ஒத்தாசையை அளிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள், சக்திகள் பற்றிக் கூடுதலான கவனம் செலுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை மாலை மூன்று மணிக்கு உற்சவ காலத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. இதில் கலை நிகழ்ச்சிகளின் போது பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்படவுள்ளதாகமாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ச)

# வெளிநாடு சென்றோர் பணத்தைபெற அனுமதி

(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் இங்கு வங்கிகளில் வைப்பிலிட்ட பணத்தை மீளப் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வெளிநாடுகளில் நிரந்தர வசிப்பிட விசா, மற்றும் பிரஜா உரிமை பெற்றுள்ள இலங்கையர்கள் இங்குள்ள வங்கிகளில் வைப்புச்செய்துள்ள பணத்தை மீளப்பெற நிதி அமைச்சில் இருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகள் சென்ற பிரஸ்தாப இலங்கையர்கள் கடந்த ஐந்து வருடங்களாக தமது பணத்தை மீளப்பெற முடியாமல் அவை முடக்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதியமைச்சின் மேற்படி நடவடிக்கையினால் வெளிநாட்டு இலங்கையர்கள் தாம் வைப்பிலிட்ட பணத்தை இனிமேல் சுலபமாகபெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## திலீபன் அரங்கில் மாதாந்த கலைவிழா

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் யாழ். மாவட்டச் செயலகத்தினர் நடாத்தும் மாதாந்தக் கலைவிழா இன்று மாலை 7-30மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்டச் செயலகத்தின் திலீபன் அரங்கில் நடைபெறவுள்ளது.

அரசியல்துறை யாழ். மாவட்டச் செயலக தொழிற் சங்கப் பிரிவுப் பொறுப்பாளர் திரு இமையவன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கலைபண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர், விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு யாழ். மாவட்டத் துணைப் பொறுப்பாளர் செல்வி சுகுணா, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் திரு. பாலகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

விசேட கலைநிகழ்ச்சிகளாக கலைபண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவான திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்கள் வழங்கும் ''காணி நிலம் வேண்டும்'' என்னும் நாடகம் முதலாவது தடவையாக மேடையேறவுள்ளது.

### யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

## விதை உருளைக் கிழங்கு பெற்றுக்கொடுக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென விதை உருளைக்கிழங்கை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு தனியார் நிறுவனம் ஒன்று முன்வந்திருக்கிறது.

விவசாயசேவைகள் திணைக்களம் தேவையான உருளைக்கிழங்கின் அளவு தறித்து மதிப்பீடு செய்து வருகிறது.

(க) (ச) (35)

### தமிழர்

தெரிவுக்குழுவிற்கு பிரதான ...

### விசேடகொடுப்பனவு

(கொழும்பு)

காயமடையும் பொலிசார் சிகிச்சை பெறும் காலத்திலும் போர்க்கால விசேட கொடுப்பனவு வழங்கப்படும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது இது காலவரை வடக்கு, கிழக்குபகுதிகளில்கடமையாற்றும் காலத்தில் மட்டுமே பொலிசாருக்கு போர்க்கால விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே

## உருகம்பொல கைதுசெய்ய பகிரங்க பிடி ஆணை

[கொழும்பு]

முன்னாள் உதவிப் பொலிஸ் ... உருகம்பொல மீது ... தொடர்ந்து இருப்பதில்லையாதலால் அவரது முகவரியைக் கண்டு பிடிப்பதற்கு மேலும் ...

பார்ஸிலோனாவில் நடை
பெறும் ஒலிம்பிக் போட்டி களின்ஆறாவது நாளில் நீச்சல் போட்டிகளில் இதுவரையி லான ஐந்து உலக ஒலிம்பிக் சாதனைகள் முறியடிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை உடல்வலு வைப் பெருக்கிக் கொள்வதற் (போதைவஸ்து) உட்கொண்ட தான குற்றச்சாட்டின் பேரில் மூன்று பிரிட்டன் விளையா ட்டு வீரர்கள் விலக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட மூவரில் ஐரோப்பாவின் இன் டோர் சாம்பியனான டேவிட் லிவிங்ஸ்ரனும் ஒருவராவார்.

# குவைத் பொலிசில் சிங்களவர் மர்ம மரணம்

(குவைத்)

குவைத்தில் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறிலங்காவைச் சேர்ந்த தி. அசோகா பதமகுமார (39) என் பவர் மரணமடைந்துள்ளார். இவரது மரணத்திற்கு உடலில் ஏற்படுத்தப்பட்ட காயங்களே காரணம் என்று மரண விசா ரணை அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த யூன் மாத முற்பகுதி யில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதா வது, குவைத்தில் ஆயுதம்தாங் கிய கொள்ளையரால் நடத் தப்பட்ட பில்லியன் ரூபாய் களுக்குமேற்பட்ட தங்க-வைர- நகைக்கொள்ளை பற்றி இவர் பொலிசில் புகாரிடச் சென் றிருந்தார். அப்போது மேல் விசாரணைக்காக இவர் தடுத்து வைக்கப்பட்டதாகவும், மேற் படி கொள்ளையின் ஒரேசாட்சி யானஇவர் அங்குமரணமடைந் ததாகவும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி சி. மாகிறட்ராணி

மல்லாகத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னராசா வின் மனைவியும் சி. சூரியாவின் அன்புத்தாயாரும் ஈ.ஆர். திருச்செல்வத்தின் சகோதரியும் திருமதி சந்திரா திருச்செல்வத்தின் மைத்துனியும் ஆகிய மாகிறட்ராணி சின்னராசா காலமாகிவிட்டார்.

அன்னாரது பூதவுடல் 981, வளன்புரம், கொழும் புத்துறையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து எடுத் துச் செல்லப்பட்டு மரியன்னை சேமக்காலையில் இன்று பி. ப. 3. 00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

981, வளன்புரம்,
கொழும்புத்துறை.

தகவல்:
ஜே. ஏ. நவரட்ணம்
(2931)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவ காலத்தில் தினமும் காலையில் திருப்பலிகளும், மாலையில் செபமாலை நற் கருணை ஆசீர்வாதம் ஆகியன இடம்பெறும் என ஆலய பங் குத் தந்தை தெரிவித்துள் ளார். (24)

★ ★ ★

அரியாலை புனித யூதாத தேயு ஆலயத்தில் ஆவணி மாதம் 5 ஆம் திகதி சின்ன மடு மாதா திருவிழா கொண்ட டாடப்படும். அனைத்து தீவக மக்களையும், அன்னையின் பக்தர்களையும் திருவிழாத் திருப்பலியில் காலை 7 மணிக் குக் கலந்து அன்னை மூலம் ஆண்டவரின் ஆசி பெற பங் குத் தந்தை அருட் திரு. ச. இயூஜின் பிரான்சிஸ் அடி களார் அழைக்கின்றார்.

★ ★ ★

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு அம்மன் ஐயனார் ஆலயத்தில் இன்று முதலாம்திகதி சனிக் கிழமை மாலை அம்பாள் அவதரித்த தினமான ஆடிப் பூரம் திருவிழா விசேட அபி சேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும்.

பின் அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்க உள்ளார் (24)

## இசையரங்கு

(நல்லூர்)

சிறிமுருகன் தண்ணீர்ப்பந் தலின் ஐம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நல்லூர் சிறிமுருகன் தண்ணீர்ப் பந்த லில் தெய்வீக இசை அரங்கு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. வரும் திங்கட்கிழமை (3-8-92) ஆரம்பமாகும் இசையரங்கு தொடர்ந்து 26 தினங்கள் நடைபெறும். தினமும் 6-00 மணிமுதல் 8-00 மணிவரை இசையரங்கு நடைபெறும்.

## ஆங்கிலதினம்

கைதடி விக்னேஸ்வர வித்தி யாலயத்தில் அண்மையில் ஆய்வுகூட திறப்புவிழாவைத் தொடர்ந்து ஆங்கில தின நிகழ்ச்சிகள் பாடசாலை அதி பர் திரு. இ. சோதிநாதன் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. ஆங்கிலதின விழா விற்குப் பிரதம விருந்தினராக இ. கயிலைநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் — சாவ கச்சேரிக் கோட்டம்) அவர் ள் கலந்து சிறப்பித்தார்கள்.

பாடசாலை மாணவர்கள் மிகவும் சிறப்பாக இதுவரை காலமும் நடைபெறாதவகை யில் பல நிகழ்வுகளை முன் வைத்தார்கள். குறிப்பாக ஆங்கில நாடகம் பாட்டு அபி நயனம் நடனம் போன்ற நிகழ்வுகள் பார்வையாளரின் மிகுந்த பாராட்டுதலைப் பெற்றுஇனிது நிறைவேறியது.

## ஆயுதம்

காலத்தின்போது விகாரையின் பாதுகாப்பிற்காகவும் தனது தற்பாதுகாப்பிற்காகவும் பௌத்தபிக்குலைசன்ஸ்உள்ள ஆயுதங்களையே வைத்திருந் தார் எனத்தெரிவித்திருந்தார் இதனை நீதிபதி ஏற்றுக் கொண்டு,

சாட்சியங்கள் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாலும் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக் கப்படாததாலும் எதிரியை விடுதலை செய்வதாக அறி வித்தார்.

இதேநேரம் கடந்த 22 ஆம் திகதி தந்திரிமலையில் கொல் லப்பட்ட தேரர் குறித்த விப ரங்களை வெளியிட்ட கூட்டுப் படைத் தலைமையக பேச்சா ளர் கேர்ணல் சரத் முனசிங்க ''எந்தக் குருமாருக்கும் பாது காப்புக்கென குண்டுகள் ஆயு தங்கள் வழங்குவதில்லை என் றும், ஆனால் அவர்களுக்கு தேவையெனில் பாதுகாப்பு வழங்கப்படும்'' எனத் தெரி வித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

தெரிவுக்குழுவிற்கு பிரதான சிங்கள அரசியற்கட்சிகள் தீர்வு திட்டங்கள் எதையும் முன் வைக்காமையும், வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர் பாய் அரசியற்கட்சிகளின் நிலைப்பாடும் கொழும்பி லுள்ள தமிழ்-முஸ்லிம் குழுக் களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும் தெரிவுக்குழு வின் செயற்பாடுகளை பெரும் பாலும் ஸ்தம்பிக்கச் செய்தன எனவும் செய்திகள் குறிப்பிடு கின்றன.

இந்நிலையில், இனப்பிரச் சினை தொடர்பாக அரசாங் கத்தின் அடுத்த கட்ட நட வடிக்கை குறித்து பெரும் குழப்பநிலை தோன்றியுள்ள தாகத்தெரிவிக்கப்படுகின்றது'

## உற்சவ

செல்லலாம். ஆடியபாதம் வீதிப்பக்கமிருந்து கோவில்வீதி வழியாக நகரை நோக்கிச் செல்லும் வாகனங்கள் சிவன் வீதிவழியாகப் பலாலி வீதிக் குச் சென்று அங்கிருந்து நக ருக்குச் செல்லலாம். நகரிலி ருந்து செல்லும் வாகனங்க ளும் அதே பாதையால் செல் லலாம்.

மேலும் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பின்வரும் விடய ங்களையும் கவனத்திற்கொள் வார்களாயின் பிரச்சினை களைத் தவிர்த்துக் கொள்ள லாம். தேவைக்கதிகமான நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்தல்சிறு பிள்ளைகளைப் பெற்றோர் தம்முடனேயே அழைத்து வருதல், துவிச்சக் கர வண்டியில் வரும் அடியார் கள் தமது வண்டிகளைத் தரிக்கும் நிலையங்களில் பாது காப்பிற்காக விடுதல் அடி யார்கள் பொருள்கள் அல் லது உடைமைகள்காணாமற் போனால்உடனடியாக காவல் துறையின் உற்சவகாலப்பணி மனைக்கு அறிவித்தல் இவ் வாறு காவல்துறையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உதவிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல மீது பகிரங்க பிடி ஆணையை கொழும்பு உயர் நீதி மன்ற நீதிபதி ஹிராணி திலகவர்தன கடந்த செவ்வாய்க்கிழமை பிறப்பித்தார்.

செவ்வாய்க்கிழமை இவ் வழக்கு விசாரணைக்கு வந்த போது சிரேஷ்ட அரச வழக் கறிஞர் ஏ ஆர். சி. பெரேரா எதிரி குறித்த ஒரு முகவரியில் யாதலால் அவரது முகவரியைக் கண்டு பிடிப்பதற்கு மேலும் அவகாசம் தரும்படி கேட் டிருந்தார். முன்பு இவரது முகவரி தெரியாததால் அழைப் பாணை வழங்கப்பட முடி யாதுள்ளதென்று தெரிவித் தார் இரகசிய பொலிசார் இது சம்பந்தமாகப் பலரை விசாரித்தனர். இது வரை எவ்வித தகவலும் கிடைக்க வில்லை.

இந்த வழக்கில் அட்டர்னி ஜெனரல் முன்னாள் டி ஐ ஜி. உடுகம் பொல 'அத்த' பத் திரிகையில் கறுப்பு பூனைக ளின் கொலைகள் என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்த அறிக்கைசம்பந்தமாக குற்றஞ் சாட்டியிருந்தார்.

## பேருரை

தமிழீழக் கல்வி மேம்பாட் டுப் பேரவையின் சார்பில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 'தமிழ் கற்றல் கற்பித்தலில் சில புதிய பரிமாணங்கள்'' என்ற விட யம் குறித்துவரும் திங்கட் கிழமை [03-08-92] பிற்பகல் 3-30மணிக்கு பேருரை ஆற்ற வுள்ளார்.

இந்த நிகழ்வு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. அண்மையில் சிங்கப்பூரில் நட ந்த உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் தாம் கலந்து கொண்டு ஏற்பட்டமனப்பதிவு களை இப்பேருரையின்போது பேராசிரியர் வெளிப்படுத்த உள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திருட்டு

வீட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த றலிசைக்கிள் ஒன்று இரவு நேரம் திருடப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு குருநகர் மவுண் கார்மேல் வீதியில் இம்மனு வல் (குலம்) என்பவரது இல்ல த்தில் நடைபெற்றது.

இதுசம்பந்தமான முறைப் பாடு யாழ் காவல் நிலையத் தில் சைக்கிளைக் களவு கொடுத்தவரால் பதியப்பட் டுள்ளது. (21)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

31- 07- 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5073

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 28-4672, 41-6893, 26-3632, 42-9625, 24 6759, 26-7546, 41-7699. 28-2212, 28-2049, 26-1019. 26-5963, 70-9642.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள் 22-3611, 27-7717, 24-9744, 40-2573, 40-1214, 42-3726 41-1799, 24-6533, 26-5870, 26-736, 26-5244, 26-[illegible], 22-6073, 42-3339, 27-9090, 41-8432.